NST Campus

# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2026

| தரம் 09 | இஸ்லாம் | 2 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டிலக்கம் : ......................  புள்ளிகள்

பகுதி 1 இலுள்ள எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை தருக.

❶ மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக

01) ரிஸாலத் என்ற அறபுச் சொல் குறிக்கும் கருத்து யாது.
1) தூதுத்துவம் 2) மரணத்தின் பின் உள்ள வாழ்வு
3) நபித்துவம் 4) படைப்பாளன்

02) அல்லாஹ்வுக்குரிய அழகிய திருநாமங்களுல் தனித்துவமான திருநாமம் எது.
1) லப்ளுல் ஜலாலஹ் 2) அர்-றஹ்மான்
3) அல்-மலிக் 4) அர்-றஹீம்

03) உயிரைக் கைப்பற்றும் மலக்கின் பெயர்.
1) ஜிப்ரீல் அலை 2) மலகுல் மவ்த்
3) இஜ்ராயீல் அலை 4) றகீப் அலை

04) நரகவாதிகளுக்கு உணவாக திணிக்கப்படும் உணவு.
1) பசும் பால் 2) தேன்
3) மன்னு சல்வா உணவு 4) ஸக்கூம் எனும் உணவு

05) அஷ்ஷபாஅதுல் குப்ரா எனப்படுவது
1) பெரிய மன்றாட்டம் 2) சுய விசாரனை
3) பரிந்து பேசுதல் 4) பாவமன்னிப்பு

06) வானத்துக்கும் பூமிக்குமிடைப்பட்ட பகுதியை நிரப்புமளவு பிரமாண்டமான இறக்கைகளைக் கொண்ட மலக்கு
1) இஸ்ராயீல் (அலை) 2) இஸ்ராபீல் (அலை)
3) மீக்காயீல் (அலை) 4) ஜிப்ரீல் (அலை)

(07) ஜம்உ தக்தீம் என்பது குறிக்கும் கருத்தைத் தருவது.
1) சேர்த்து முற்படுத்தி தொழுவதைக் குறிக்கும்.
2) சேர்த்து தொழுவதைக் குறிக்கும்
3) சேர்த்து பிற்படுத்தி தொழுவதைக் குறிக்கும்.
4) சுருக்கி தொழுவதைக் குறிக்கும்.

08) ஸகாத் பாடத்தில் 40 முதல் 120 ஆடுகள் இருப்பின் வழங்கவேண்டிய ஆடு யாது?
1) 02 பெண் ஆடு 2) 03 பெண் ஆடு
3) 04 ஆடுகள் 4) 01 பெண் ஆடு

09) ஹஜ் கடமை நிறைவேற்றும் முறைகளில் அல் - கிரான் என்பது
1) ஹஜ்ஜை மாத்திரம் நிறைவேற்றுவதைக் குறிக்கும்.
2) உம்ராவை மாத்திரம் செய்தல்.
3) ஹஜ்ஜையும் உம்ராவையும் சேர்த்து செய்தல்.
4) தவாப் செய்தல்

10) தொழாதவர்கள் நுழையும் நரகம்

1) வைல்  2) ஸக்ர்/ஸகர்
3) அந்நார்  4) ஜகன்னம்

11) தொழுகையில் மறதிக்காக செய்யப்படும் ஸஜதா

1) ஸஜதா ஸ.்.வு  2) ஸஜதா நிஅம்
3) ஸஜதா சுக்ர்  4) ஸஜதா திலாவத்

12) ஸுல்தான் முஹம்மது பாதிஹ் அவர்கள் சிறந்து விழங்கிய கலைகள் எவை

1) கணிதம்  2) வானியல்
3) விஞ்ஞானம்  4) மேற்கூரிய யாவும் சரியானது

13) ஸஹீஹுல் புஹாரியில் உள்ள ஹதீஸ்களின் எண்ணிக்கை

1) 7275  2) 8000
3) 6351  4) 3521

14) ஜனாஸா தொழுகையில் மய்யித்திற்காக பிரர்த்திப்பது

1) முதலாம் தக்பீருக்குப் பின்  2) இரண்டாம் தக்பீருக்குப் பின்
3) மூன்றாம் தக்பீருக்குப் பின்  4) நான்காம் தக்பீருக்குப் பின்

15) ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்கள் எங்கு பிறந்தார்கள்.

1) மதீனா நகரில்  2) ஈராக் நகரில்
3) பலஸ்தீன் நகரில்  4) மக்கா நகரில்

(16) தர்தீபுத் திலாவத் என்பது

1) ஓதப்படும் ஒழுங்கு  2) வஹியை எழுதியவர்
3) அருளப்பட்ட ஒழுங்கு  4) முஸ்னத்

(17) அல்குர்ஆனை பிழையாக ஓதுகிறார்கள் என உஸ்மான் ரழி அவர்களிடத்தில் முறையிட்ட ஸஹாபி

1) முஆத் பின் ஜபல்  2) ஸைத் பின் தாபித்
3) ஹுதைபதுல் யமானி  4) உமர் ரழி

(18) அபூலஹபின் மனைவியின் பெயர்

1) ஆஸியா  2) பாத்திமா ரழி
3) ஸஜா  4) அர்வா பின்த் ஹர்ப்

(19) க.்.பாவைச் சுற்றி வலம் வருதலைக் குறிக்கும் அறபுச் சொல்

1) தவாப்  2) ஸபா
3) மதாப்  4) மர்வா

(20) ஜாமிஉல் குர்ஆன் என்ற சிறப்புப் பெயர் கொண்ட கலீபா யார்.

1) முஹம்மத் நபி  2) உஸ்மான் ரழி
3) அபூபக்கர் ரழி  4) உமர் ரழி.

(20x1 = 20 புள்ளிகள்)

❷ இடைவெளி நிரப்புக.

(உம்மல் மஸாக்கீன் / ப.்.ஸ் / உம்மஹாதுல் மு.்.மினீன் / நான்கு வகை / ஜன்னதுல் பிர்தவ்ஸ்)

01. மரணத்தின் பின் எழுப்பப்படுவது .......................................... எனப்படும்.

02. அகீதா துறை அறிஞ்சர்கள் அஸ்மாஉல் ஹுஸ்னாவை ............................ வகையாகப் பிரிக்கின்றனர்

03. சுவர்கத்தின் வகைகளுல் உயர்தரமான சுவர்கம் .................................. ஆகும்.

04. நபியவர்களின் மனைவி மார்களை ....................................................... என அழைப்பர்.

05. நபியவர்களின் மனைவியான ஸைனப் பின்த் ஹுஸைமா அவர்களின் சிறப்புப் பெயர் ........................................ ஆகும்

(5x2 = 10 புள்ளிகள்)

❸ சரி ( ✓ ) பிழை ( ✗ ) என அடையாளமிடுக.

01. வேதமும் சுஹ்பும் வழங்கப்பட்ட நபி நபி மூஸா அலை ஆகும் ( )

02. ஈஸா அலை அவர்களின் சீடர்கள் ஹவாரியூன்கள் என அழைக்கப்படும் ( )

03. மஹப்பதுர் ரஸூல் என்பது ஸஹாபாக்கள் மீது அன்பு கொள்வதைக் குறிக்கிறது ( )

04. யவ்முத் தர்வியா என்பது ஹஜ்ஜில் 09ம் நாளைக் குறிக்கும். ( )

05. ஸூறா முஹா ஒரு மதனி ஸூறாவாகும். ( )

(5x2 = 10 புள்ளிகள்)

## பகுதி ii

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**01.**

1. கழா கத்ரை நம்புவதால் கிடைக்கும் நன்மை இரண்டு தருக?

   1. ..........................................................................................................................................

   2. ..........................................................................................................................................

2. மறுமையின் நிகழ்வுகள் மூன்று தருக?

   1. ..........................................................................................................................................

   2. ..........................................................................................................................................

   3. ..........................................................................................................................................

3. சுவனம் நுழவதற்கு தடையாக அமையும் சமூகவிரோத செயள்கள் 5 தருக?

   1. ........................................................................................ 2. ..............................................................................

   3. ........................................................................................ 4. ..............................................................................

   5. ........................................................................................

(2+3+5 =10 புள்ளிகள்)

**02.**

1. தொடக்கின் இரு பிரிவுகளையும் தருக?

   1. ................................................................................. 2. ................................................................................

2. ஜனாபத்துடையவர் செய்யக்கூடாத விடயங்கள் 03 தருக?

1. ........................................................................................ 2. ................................................................................

3. ........................................................................................ 4. ................................................................................

3. கடமையான குளிப்பின் சுன்னத்துக்கள் 5 தருக?

1. ........................................................................................ 2. ................................................................................

3. ........................................................................................ 4. ................................................................................

5. ........................................................................................

(2+3+5 =10 புள்ளிகள்)

**03.**

1. ஜனாஸாவுக்குரிய கடமைகள் நான்கையும் தருக?

1. ........................................................................................ 2. ................................................................................

3. ........................................................................................ 4. ................................................................................

2. ஸகாத் விதியாகும் பொருட்கள் 04 தருக?

1. ........................................................................................ 2. ................................................................................

3. ........................................................................................ 4. ................................................................................

3. ஸகாத் பெறத் தகுதியான கூட்டத்தினர்கள் 05 தருக?

1. ........................................................................................ 2. ................................................................................

3. ........................................................................................ 4. ................................................................................

5. ........................................................................................

(2+3+5 =10 புள்ளிகள்)

**04.**

01. மூஸா நபிக்கு வழங்கப்பட்ட இரு மு.ஃஜிஸத்துக்கள் (அற்புதங்கள்) லும் எவை?

1. ........................................................................................ 2. ................................................................................

02. சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான வழிகள் 03 தருக?

1. ........................................................................................................................................................................

2. ........................................................................................................................................................................

3. ........................................................................................................................................................................

03. பிறமனிதர்களின் உரிமைகளுடன் தொடர்புடைய ஹராமான செயற்பாடுகள் 5 தருக?

1. ........................................................................................ 2. ................................................................................

3. ........................................................................................ 4. ................................................................................

5. ........................................................................................ (2+3+5 =10 புள்ளிகள்)

**05.**

01. நபி (ஸல்) அவர்களின் இறுதிப் பேருரையின் 05 அம்சங்களை தருக ?

1. ........................................................................................................................................................................

2. ........................................................................................................................................................................

02. ஹதீஸ் கிரந்தங்களில் ஸுனன் அர்பஆவில் அடங்கும் ஹதீஸ் கிரந்தங்கள் 03 தருக?

1. ........................................................................................ 2. ..............................................................................

3. ........................................................................................ 4. ..............................................................................

03. மஸ்ஜிதுக்களில் பேனி நடக்க வேண்டிய ஒழுங்கு முறைகள் 05 தருக?

1. ........................................................................................................................................................

2. ........................................................................................................................................................

3. ........................................................................................................................................................

4. ........................................................................................................................................................

5. ........................................................................................................................................................

(2+3+5 =10 புள்ளிகள்)

**06.**

01. அல்குர்ஆன் தொகுக்கும் பணிக்கு தலைமை தாங்கிய ஸஹாபியின் பெயர்

1. ........................................................................................

02. அல்-குர்ஆன் எழுதி பாதுகாக்கப்பட்ட பொருட்கள் 03 தருக?

1. ........................................................................................................................................................

2. ........................................................................................................................................................

3. ........................................................................................................................................................

03. பாவமன்னிப்பு கோருவதந்கான நிபந்தனைகள் 05 தருக.

1. ........................................................................................................................................................

2. ........................................................................................................................................................

3. ........................................................................................................................................................

4. ........................................................................................................................................................

5. ........................................................................................................................................................

(2+3+5 =10 புள்ளிகள்)

## விடைககள்

## பகுதி 1

| | | | | |
|---|---|---|---|---|
| 01. 1 | 02. 1 | 03. 2 | 04. 4 | 05. 1 |
| 06. 4 | 07. 1 | 08. 4 | 09. 3 | 10. 2 |
| 11. 1 | 12. 4 | 13. 1 | 14. 3 | 15. 2 |
| 16. 1 | 17. 3 | 18. 4 | 19. 1 | 20. 2 |

***2.***

01. ப.ஃஸ்
02. 04 (நான்கு வகை)
03. ஜன்னதுல் பிர்தவ்ஸ
04. உம்மஹாதுல் மு.ஃமினீன
05. உம்மல் மஸாக்கீன்

***3.***

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | ✓ | 02. | ✓ | 03. | × | 04. | × | 05. | × |

பகுதி ii

*__வினா இலக்கம் 01.__*

01.


1. அல்லாஹ் அளித்தவற்றில் திருப்தி கண்டு வாழ அது வழிநடத்தும்.
2. ஆக்க வேலைகளில் ஈடுபடுவதற்கு அது தூண்டல் செய்யும்.
3. அபாயகரமான சந்தர்ப்பங்களில் துணிச்சலோடு செயல்பட தூண்டுதலாக அமையும்.
4. தீமைகளை எதிர்ப்பதில் உறுதியாக இருக்கச் செய்யும்.
5. துன்பங்கள், துயரங்களின்போது பொறுமையைக் கைக்கொள்ளச் செய்யும்.

*02 . 1. ப.ஃஸ் 2. மஹ்ஷர்*

*3. ஹிஸாப் 4. ஹவ்லுல் கவ்ஸர்*

*5. ஸிராத்*

*03. 1. கொலை, 4. பொறாமை,*

*2. கொள்ளை, 5. சுயநலம் பேனுதல்*

*3. வாக்கு மீறுதல், (இவை போன்றன எழுதிருப்பின் புள்ளிகள் வழங்குக)*

*__வினா இலக்கம் 02.__*

*01. 1. ஹதஸுல் அக்பர் - பெரும் தொடக்கு*

*2. ஹதஸு அஸ்கர் - சிறு தொடக்கு*

*02. 1. தொழுதல் 2. குர்ஆன் ஓதுதல் / தொடுதல்*

*3. தவாப் செய்தல் 4. பள்ளியில் தரித்தல்*

03.

**ஸுன்னத்துகள்**

- ★ குளிக்குமுன் சிறுநீர் கழித்தல்
- ★ உடம்பில் படிந்திருக்கும் அசுத்தங்களை அகற்றிவிடுதல்
- ★ இரு கைகளையும் மணிக்கட்டு வரையில் கழுவிக் கொள்ளல்
- ★ வாய் கொப்பளித்தல், நாசிக்கு நீர் செலுத்தல்
- ★ பற்களைத் துலக்குதல்
- ★ வுழூச் செய்தல்
- ★ உடல் முழுவதையும் தேய்த்துக் குளித்தல்

## வினா இலக்கம் 03.

01.

I. குளிப்பாட்டல்

II. கபனிடுதல்

III. தொழுவித்தல்

IV. அடக்கம் செய்தல்

02.

**ஸக்காத் விதியாகும் பொருட்கள்:**

1. தங்கம், வெள்ளி, பணம்
2. தானியங்கள் (கோதுமை, நெல் போன்றன)
3. கால்நடைகள் (ஆடு, மாடு, ஒட்டகம்)
4. பழவகைகள் (பேரீச்சை, திராட்சை)
5. வியாபாரப் பொருட்கள்

03.

''தானம் எல்லாம் வறியவர்களுக்கும், ஏழைகளுக்கும், தானத்தை வசூல் செய்யும் ஊழியர்களுக்கும், புதிதாக இஸ்லாத்தைத் தழுவியவர்களுக்கும், அடிமைகளை விடுதலை செய்வதற்காகவும், கடனில் மூழ்கியவர்களுக்கும், அல்லாஹ்வின் பாதையில் ஈடுபடுவோருக்கும், வழிப்போக்கர்களுக்கும் உரித்தானதாக அல்லாஹ் ஏற்படுத்தியதாகும். அல்லாஹ் (அனைத்தையும்) மிக அறிந்தவனும் ஞானமுடையவனாகவும் இருக்கிறான்.'' (9:60)

## வினா இலக்கம் 04.

01. 1. கை பிரகாசித்தல் 2. கைத்தடி பாம்பாகுதல்

02

**சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான சில வழிகாட்டல்கள்**

- அனைத்து மக்களையும் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் சந்ததியினர் என நோக்குதல்
- அண்டை அயலவர்களுடன் சுமுகமான உறவினை வளர்த்துக்கொள்ளல்
- தவறுகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் மன்னித்து, மன்னிப்பு கேட்டு பெருமனதுடன் நடந்துகொள்ளல்
- பொது நிகழ்வுகள், வைபவங்களில் கலந்துகொள்ளல், பரஸ்பரம் உதவிக்கொள்ளல்
- இக்கட்டான சந்தர்ப்பங்கள், தேவைகளின்போது பரஸ்பரம் உதவிக்கொள்ளல்
- பிரதேச, தேசிய நலன் அபிவிருத்தி நடவடிக்கைகளில் பங்கேற்றல்
- இன நல்லிணக்கங்களை ஏற்படுத்தும் கலந்துரையாடல்கள், ஒன்றுகூடல்கள், நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல், கலந்து கொள்ளல்
- அகீதா, இபாதா, ஹலால், ஹராம் போன்ற விடயங்களில் அடுத்தவர் உள்ளங்களில் இன சமய வெறுப்பு ஏற்படாதவாறு நடந்துகொள்ளல்
- சொல்லாலோ, செயலாலோ சக சமய கலாசார மக்கள் இன்னல் படுவதைத் தவிர்த்துக்கொள்ளல்

03.

**பிற மனிதர்களின் உரிமைகளுடன் தொடர்பானவை**

★ திருட்டு

★ அபாண்டம் சுமத்துதல்

★ மானத்தைப் போக்குதல்

★ உயிரைப் பறித்தல்

★ சொத்துக்களைச் சேதப்படுத்தல்

*<u>வினா இலக்கம் 05.</u>*

01. 1.

**அவ்வுரையின் உள்ளடக்கம் வருமாறு:**

1. இணைவைப்பு எனும் இழிவிலிருந்து நீங்கி அல்லாஹ்வுக்கு மாத்திரமே அடிபணிந்து வாழ வேண்டும்.
2. மனிதர்களிடையே சமத்துவம் பேணப்படல் வேண்டும். அரபிகள் அஜமிகளை விட சிறந்தவர்களுமல்லர். அஜமிகள் அரபிகளை விட சிறந்தவர்களுமல்லர். அனைவரும் ஆதமின் பிள்ளைகள். ஆதம் மண்ணால் படைக்கப்பட்டவர்.
3. பழைய கொலைகளுக்காகப் பழிவாங்கும் ஜாஹிலிய்யாக் கால மரபு முற்றாக ஒழிக்கப்படல் வேண்டும். இதற்கு முன்மாதிரியாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த ரபீஆ பின் ஹாரிஸின் புதல்வனின் கொலைக்காகப் பழிவாங்குவதை இரத்துச் செய்தார்கள்.
4. வட்டியுடன் தொடர்புபட்ட கொடுக்கல் வாங்கல்களை முற்றாகத் தவிர்ந்து கொள்ளல் வேண்டும். இதற்கு முன்னுதாரணமாக தனது சிறிய தந்தை அப்பாஸுக்கு வரவேண்டிய வட்டியை முதலில் இரத்துச் செய்தார்கள்.
5. பெண்களை மதித்து அவர்களது உரிமைகளைப் பேண வேண்டும். கணவன் மனைவியுடன் நடந்துகொள்ள வேண்டிய மென்மையான வழிமுறையினை வலியுறுத்தினார்கள்.
6. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உரை நிகழ்த்திய நாள், மாதம், இடம் ஆகியன புனிதமானவை போன்று முஸ்லிம்களின் உயிர், உடமை, மானம் ஆகியனவும் புனிதமானவை. ஆகவே அவற்றைப் பாதுகாத்தல் வேண்டும்.
7. அல்குர்ஆன், ஸுன்னாவைப் பின்பற்றுதல் வேண்டும். ''உங்கள் மத்தியில் இரண்டை விட்டுச் செல்கின்றேன். அவற்றைப் பின்பற்றும் காலமெல்லாம் வழி தவற மாட்டீர்கள். அவை அல்குர்ஆனும் எனது வழிமுறையான ஸுன்னாவுமாகும்'' (முஸ்லிம்) என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
8. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் போதனைகளைப் பிறருக்கு எத்தி வைக்க வேண்டும்.

02. 1. அபூதாவூத்
    2. திர்மிதி
    3. நஸாஈ
    4. இப்னு மாஜா

03. வணக்கங்களை நிறைவேற்றுதல்
தஹிய்யதுல் மஸ்ஜித் தொழுதல்
தூய்மை பேணல்
மஸ்ஜிதினுல் நுழையும் போது துஆ ஓதுதல்
அமைதி பேணுதல்
கல்விக்கூடமாக இருத்தல் (இவை போன்றன)

*__வினா இலக்கம் 06.__*

*01.. ஸைத் பின் தாபித்*

*02. 1.தோல் 2. அகலமான எழும்புகள் 3. ஈச்சம்பட்டை*

*__03.__*

**பாவ மன்னிப்புக் கோருவதற்கான நிபந்தனைகள்:**

1. தான் செய்த பாவங்களை எண்ணி மனம் வருந்திக் கைசேதப்படுவது
2. செய்த பாவம் மனிதர்களுடன் சம்பந்தப்பட்டதெனில் முதலில் அவர்களிடம் மன்னிப்புக் கேட்பது
3. தூய எண்ணத்துடன் (இக்லாஸ்) பாவமன்னிப்பு கோருவது
4. குறித்த பாவத்தை மீண்டும் செய்யமாட்டேன் என உறுதிகொள்வது
5. தான் செய்த பாவங்களை முற்றுமுழுதாக விட்டுவிட்டு அவற்றிலிருந்து நீங்கியிருப்பது